S.சீனிவாசன் M.A.,
Cell: 9442014663
9487246714
9360789464
சீனு
ரியல் எஸ்டேட் & கன்ஸ்ட்ரக்சன்
61, மெயின் ரோடு,
பஸ் நிலையம் எதிரில், குற்றாலம்
வீடு : 5/75, மெயின்ரோடு, காசிமேஜர்புரம்.

தென்காசி
# சிட்டி நியூஸ்

போன் : 0462-2331046
94861 51477
94876 05037
கணபதி விலாஸ்
மரம் ஓடு வியாபாரம்
எங்களிடம் பாவூர்சத்திரம் கோபுரம் மார்க் ஓடு - தளக்கல், திருச்சூர் தளக்கல், பணகுடி தளக்கல், சவுக்கு, மூங்கில், மூங்கில் ஏணி கிடைக்கும்
25-M/2, சிவசக்தி ரோடு, திருநெல்வேலி - 1

தென்காசி செப்டம்பர் 26-30 2020 சிட்டி 4 நியூஸ் 239 பக்கம் 4 வார இதழ் விலை கிடையாது

## சென்னையில் மருத்துவ நிபுணர் குழுவுடன்

# முதலமைச்சர் பழனிசாமி 29ம்தேதி ஆலோசனை

## அக்டோபர் மாதம் முதல் ரேஷன் கடைகளில் மண்எண்ணெய் விலை உயர்கிறது

### தமிழக அரசு உத்தரவு

சென்னை,

ரேஷன் கடைகளில் மண்எண்ணெய் விலை அக்டோபர் மாதம் முதல் உயர்த்தப்படும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர், சென்னை தவிர அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

சென்னை ஐகோர்ட்டின் உத்தரவின் அடிப்படையில், மண்எண்ணெய் மொத்த வணிகர்களின் ஆதாய விளிம்புத் தொகை மற்றும் போக்குவரத்து கட்டண ஆதாய விளிம்புத் தொகை ஆகியவை உயர்த்தி வழங்கப்பட்டதன் அடிப்படையில், மண்எண்ணெய் சில்லரை விற்பனை விலையை உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

எண்ணெய் நிறுவனங்களால் பொதுவினியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மண்எண்ணெய் விற்பனை விலையை உயர்வு செய்து ஆணையிடப்பட்டது.

அதன்படி, சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் ரேஷன் கடைகளில் வரும் அக்டோபர் 1ந் தேதி முதல், ரேஷன் அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மண்எண்ணெயின் சில்லரை விற்பனை விலையை லிட்டருக்கு குறைந்தபட்சமாக ரூ.15 முதல் அதிகபட்சமாக ரூ.16.50 வரை உயர்த்தி விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

எனவே உங்களின் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மண்எண்ணெய் வணிகர்களுக்கும் எண்ணெய் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கொள்முதல் பட்டியலின் அடிப்படையில் மண்எண்ணெய் விலையை திருத்தி நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

ரேஷன் கடைகளில் நுகர் வோருக்கான மண்எண்ணெய் சில்லரை விற்பனை விலையை திருத்தி நிர்ணயம் செய்யும்போது, சில்லரை வணிகர்களுக்கான ஆதாய விளிம்புத் தொகை, போக்குவரத்து கட்டண ஆதாய விளிம்புத் தொகை அனுமதிக்கப்பட வேண்டும்.

இவற்றின் விளிம்புத் தொகையை உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டதால், அதன் அடிப்படையில் மாநிலம் முழுவதும் ரேஷன் அட்டைதாரருக்கு வழங்கப்படும் மண்எண்ணெய் சில்லரை விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

அதன்படி, ரேஷன் கடை மண்எண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.15 முதல் ரூ.16.50 வரை விலை நிர்ணயிக்கப்படும்.

ஒரே இடத்தில் வெவ்வேறு விலையில் சில்லரை விற்பனை விலை நிர்ணயம் செய்வதை தவிர்ப்பதற்காக, பேரலில் இருப்பு வைத்து விற்பனை செய்யும் மொத்த வணிகர், நிலத்தடியில் இருப்பு வைத்து விற்பனை செய்யும் வணிகர் ஆகியோருக்கு நிர்ணயித்தபடி ஆதாய விளிம்புத் தொகையை அனுமதித்து, சில்லரை விற்பனை விலையில் அதிகரிக்கப்படும் விலையை (லிட்டருக்கு 0.11 பைசா) சில்லரை வணிகர்களுக்கான கூடுதல் ஆதாயத்தில் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தற்போது ரேஷன் கடைகளில் மண்எண்ணெய் லிட்டர் ரூ.13.70 என்று விற்பனை செய்யப்படுகிறது. தற்போதுள்ள உத்தரவுப்படி, அக்டோபர் முதல் அதன் விலை லிட்டருக்கு ரூ.1.30 முதல் ரூ.2.80 வரை உயர்கிறது.

## ஊரடங்கு மீண்டும் நீட்டிக்கப்படுமா?

சென்னை,

வருகிற 29ந்தேதி முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை செயலகத்தில் மருத்துவ நிபுணர் குழுவுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

கொரோனா நோய் தொற்று காரணமாக தமிழகத்தில் கடந்த மார்ச் மாதம் 24ந்தேதி ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது.

அதன்பிறகு பல்வேறு கட்டங்களாக ஊரடங்கு நீட்டிக்கப்பட்டு வருகிறது.

8வது கட்டமாக கடந்த 1ந்தேதி முதல் வருகிற 30ந்தேதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்த கால கட்டத்தில் பல்வேறு தளர்வுகளும் அறிவிக்கப்பட்டன.

தமிழகம் முழுவதும் கோவில்கள் திறக்கப்பட்டன. மாவட்டங்கள் இடையே பஸ் போக்குவரத்தும் தொடங்கியது. இபாஸ் ரத்து செய்யப்பட்டது. பூங்காக்கள், உடற்பயிற்சி கூடங்களும் திறக்கப்பட்டன. கடைகள் திறப்பு நேரமும் நீட்டிக்கப்பட்டது.




இந்த நிலையில் வருகிற 1ந்தேதி முதல் 10ம் வகுப்பு, 11ம் வகுப்பு, 12ம் வகுப்பு மாணவர்கள் விரும்பினால் பள்ளிக்கு வந்து ஆசிரியர்களிடம் ஆலோசனை பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 50 சதவீத ஆசிரியர்கள் பள்ளிக்கு வரவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது மின்சார ரெயில் போக்குவரத்து, தனியார் பஸ் போக்குவரத்து மட்டுமே முழுமையாக இயங்காமல் உள்ளது.

இந்த நிலையில் 8ம் கட்ட ஊரடங்கு வருகிற 30ந்தேதி முடிவடைகிறது. வழக்கமாக ஊரடங்கு முடியும் நேரத்தில் அடுத்த கட்டமாக ஊரடங்கை நீட்டிப்பதாக, வேண்டாமா? என்பது பற்றியும், தளர்வுகளை அறிவிப்பது பற்றியும் மாவட்ட கலெக்டர்கள் மற்றும் மருத்துவ நிபுணர் குழுவுடன் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தி அறிவிப்புகளை வெளியிடுவார்.

அந்த வகையில் வருகிற 29ந்தேதி முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை செயலகத்தில் மருத்துவ நிபுணர் குழுவுடன் ஆலோசனை நடத்த உள்ளார். முன்னதாக மாவட்ட கலெக்டர்களுடனும் அவர் ஆலோசனை நடத்துகிறார்.

அதன்பிறகு ஊரடங்கு நீட்டிக்கப்படுமா? அல்லது ஊரடங்கு முடிவுக்கு வருமா? என்பது பற்றி முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பார்.

நன்றி! நன்றி!! நன்றி!!!

பாட்டபத்து ஆயிரப்பேரி விவசாயிகளை பாதுகாத்து
பொதுமக்களுக்கும் போக்வரத்து வழியுள்ள இடத்தில்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைந்திட உத்திரவிட்ட

தலைமை வருவாய் நிர்வாக அலுவலர்
திரு, பணீந்தர ரெட்டி அவர்களுக்கும்
மக்கள் நலன் பேணும் மாவட்ட ஆட்சியர்
திரு,அருண் சுந்தர் தயாளன் அவர்களுக்கும்
விவசாய நிலத்தை காத்திட முதல் குரல் கொடுத்த
திரு, சுகுணாசிங். காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கும்
நீதிமன்றம் மூலம் நல்ல தீர்வு பெற்றுத் தந்த
வழக்கறிஞர் பொ.சிவபத்மநாதன் அவர்களுக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!

இவண் : பாட்டபத்து ஆயிரப்பேரி விவசாயிகள் சங்கம்

# பா.ஜ.க. மாநில தலைவர் சாமிநாதன் எம்.எல்.ஏ கார் கண்ணாடி உடைப்பு

புதுச்சேரி,

புதுச்சேரி மாநில பா.ஜ.க. மாநில தலைவர் சாமிநாதன் எம்.எல்.ஏ.வின் கார் கண்ணாடி உடைக்கப்பட்டது.

புதுச்சேரி மாநில பா.ஜ.க. தலைவரும் எம்.எல்.ஏ.வுமான சாமிநாதன் காலாப்பட்டு அருகே தமிழகப் பகுதியில் பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார். அங்கு நடந்து வரும் கட்டுமானப் பணியை பார்ப்பதற்காக நேற்று மதியம் காரில் சென்றார். காரை டிரைவர் சாலமன் ஓட்டிச் சென்றார். புதுவையை அடுத்த தமிழகப் பகுதியான கோட்டக்குப்பம் கிழக்கு கடற்கரை சாலையில் சென்ற போது திடீரென கல்வீசி தாக்கியதில் காரின் பின்பக்க கண்ணாடி பயங்கர சத்தத்துடன் உடைந்து நொறுங்கியது. இதனால் அதிர்ச்சி யடைந்த சாமிநாதன் காரை நிறுத்தி பார்த்தார். மர்ம நபர்கள் கல்வீசி தாக்கி விட்டு தப்பிச் சென்று இருக்கலாம் என்று தெரிகிறது. இதையடுத்து சாமிநாதன் எம்.எல்.ஏ. அதே காரில் அங்கிருந்து புறப் பட்டுச் சென்றார். இவர் இது தொடர்பாக போலீஸ் நிலையத்தில் புகார் எதுவும் செய்யவில்லை.

இது குறித்து சாமிநாதன் எம்.எல்.ஏ.விடம் கேட்டபோது, "கோட்டக்குப்பம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது பின்பக்க கண்ணாடியில் திடீரென ஒரு கல் வந்து விழுந்தது. இதில் கார் கண்ணாடி உடைந்து நொறுங்கியது. உடனே காரை நிறுத்தி பார்த்த போது அங்கு யாரையும் காண வில்லை. யாரோ கல்வீசி தாக்கி விட்டு தப்பியுள்ளனர். இதனை அரசியல் ஆக்க வேண்டாம் என்பதற்காக நான் போலீஸ் நிலையத்தில் புகார் செய்யவில்லை" என்றார்.



பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் ஆலம்பாடி ஊராட்சியில் பசுமை வீடு கட்டுமான பணியை இன்று (25-9-2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் திரு.செந்தில்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. ஆலயமணி, இளங்கோ மற்றும் பலர் உள்ளனர்.

# புறக்கடை கோழி வளர்ப்புத்திட்டத்தில் பயனாளிகளை தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வினியோகம் மாவட்ட கலெக்டர் தகவல்

ராணிப்பேட்டை,

புறக்கடை கோழி வளர்ப்புத்திட்டத்தில் பயனாளிகளை தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வினியோகம் என்று கலெக்டர் திவ்யதர்ஷினி தகவல் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை 2020-2021ம் ஆண்டில் விலையில்லா புறக்கடை கோழி வளர்ப்புத்திட்டத்தின் கீழ் விலையில்லா நாட்டு இன அசில் கோழிகள் மொத்தம் 7 ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு 400 பெண் பயனாளிகள் வீதம் மொத்தம் 2 ஆயிரத்து 800 பயனாளிகளுக்கு தலா 25 கோழிகள் வீதம் மொத்தம் 70 ஆயிரம் கோழிகள் வழங்கப்பட உள்ளன. அதற்கான விண்ணப்பங்கள் வினியோகம் செய்யப்படுகிறது.

வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள், விதவைகள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கடந்த ஆண்டுகளில் விலையில்லா கோழிகள் பெறாதவர்கள், பிற திட்டங்களால் பயன் பெறாதவர்கள் அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்க ராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் மூலமாக வேலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர், ராணிப்பேட்டை மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தேர்வு செய்யப்படும் பயனாளிகளில் 30 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சுபாஷ்பண்ணையாரை கொலை செய்ய முயற்சி பயங்கர ஆயுதங்களுடன் மர்ம நபர்கள் கைது

தூத்துக்குடி,

தூத்துக்குடி மாவட்டம் மூலக்கரை ஊரை சேர்ந்தவர் சுபாஷ்பண்ணையார். பனங்காட்டு மக்கள் கழகம் கட்சியின் தலைவர். இவர் 24.9.20 நேற்று நடந்த தினத்தந்தி அதிபர்சிவந்தி ஆதித்தனார் பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்ததுடன் வருவதாக அறிவித்திருந்தார்.

ஆனால் அந்த நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்ளவில்லை.அதேவேளையில் அவரது கட்சி தொண்டர்கள் பலரும் சிவந்தி ஆதித்தனார் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

இந்நிலையில் நேற்று (24.9.2020) செய்துங்கநல்லூர் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஆட்டோவில்பயங்கர ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகளுடன் சுற்றித்திரிந்த மர்ம வாலிபர்களை காவல்துறையினர் பிடித்து விசாரணை செய்தனர்.

காவல்துறையினரின் விசாரணையில் அவர்கள் பனங்காட்டு மக்கள் கழகம் தலைவர் சுபாஷ் பண்ணையாரின் உயிருக்கு குறிவைத்து வந்துள்ளதாக தகவல் தெரியவந்தது. இது குறித்து நெல்லை, தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் இது குறித்து விசாரணை செய்து வருகின்றனர்.

ஏற்கனவே உள்ள பகைக்கு பழிதீர்க்கும் வகையில் ஒரு டீம் அமைக்கப்பட்டு, அதில் சுமார் 40 லிருந்து 50 வரையிலானவர்கள் இந்த வேலையில் இறங்கியிருப்பதாகவும், பனங்காட்டு மக்கள் கழக தொண்டர்கள் போலவே பனியன்கள் அணிந்து கொண்டு வந்த அவர்கள் சுபாஸ்பண்ணையார் வரவில்லை என்பதை அறிந்து திரும்பியதாகவும், அப்போது போலீஸிடம் பிடிபட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

ஏற்கனவே திருச்செந்தூர் தொகுதி திமுக எம்.எல்.ஏவான அனிதாராதாகிருஷ்ணனுக்கும் பனங்காட்டு மக்கள் கழகம் தலைவர் சுபாஸ் பண்ணையாருக்கும் இடையே கருத்து மோதல் இருந்து வரும் நிலையில் இச்சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இதற்கிடையே நாளை 26.09.2020 அன்று வெங்கடேஷ் பண்ணையார் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவங்கள் குறித்து போலீஸார் தீவிரமாக விசாரணை செய்து வருகிறார்கள்.

# கடையநல்லூர் காவல் நிலையத்தில் எஸ்.பிஆய்வு காவல் நிலையத்தில் மரக்கன்று நட்டார்

கடையநல்லூர்

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நிலையத்தில், வியாழக்கிழமை தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணா சிங் ஆய்வு மேற்கொண்டார்.

காவல் நிலையத்தின் பணிகள்,சட்டம் ஒழுங்கு பிரச்னைகள் குற்றநடவடிக்கைகள், போக்குவரத்து பிரச்னைகள் காவலர்களின் குறை நிறைகள், காவல் நிலையத்தில் உள்ள வழக்கு சம்பந்தமான அனைத்து பதிவேடுகள் மேலும் காவல் நிலையத்தில் ஊரடங்கு காலங்களில் பறிமுதல் செய்து நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களை உரிமையாளர்களிடம் ஒப்படைத்தல் சம்பந்தமாக மற்றும் கிராமத்திற்கு ஒரு காவலர் நியமிக்கப்பட்டவர்கள் கிராம மக்களின் குறை நிறைகளை கேட்டு அவர்களுடன் காவல்துறையினர் நல்லுறவுடன் நடந்துகொள்ளவேண்டும் அவர்களோடு நட்புடன் பழக வேண்டும் இன்னும் சிறப்பாக செயல்பட அறிவுரை வழங்கினார் அதன் பின்னர் கடையநல்லூர் காவல் நிலையத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு முறை ஆய்வின்போது காவல் நிலைய வளாகத்தில் இயற்கை ஆர்வலர்கள் ஏற்பாட்டில் மரக்கன்று நடுவது வழக்கம் அதன் அடிப்படையில் கடையநல்லூர் காவல்துறை ஏற்பாடு செய்த மரக்கன்றுகளை காவல் நிலையம் முன்பு நட்டார் இதில் காவல் ஆய்வாளர் கோவிந்தன், மகாலட்சுமி, உதவி ஆய்வாளர்கள் விஜய்குமார் ,அமிர்தராஜ், சிவசங்கரி,, ராஜேந்திரன், வேலுச்சாமி தனிப்பிரிவு ஏட்டு செய்யதலி சிறப்பு உதவி ஆய்வாளர்கள் காவலர்கள் கலந்து கொண்டனர்





திருநெல்வேலி மாவட்டம் ஏ.ஆர்.லைன் அங்கன்வாடி மையத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் சத்து குறைவான குழந்தைகளுக்கு ஊட்ட சத்து அடங்கிய பெட்டகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.09.2020) வழங்கினார்.

# வாணியம்பாடி வாரச்சந்தை பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கடைகள்

## மாவட்ட கலெக்டர் ஆய்வு

வாணியம்பாடி,

வாணியம்பாடி வாரச்சந்தை பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கடைகளை கலெக்டர் சிவன் அருள் ஆய்வு செய்தார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தமிழகம் முழுவதும் உள்ள உழவர் சந்தை, வாரச்சந்தையை மூட தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்து வாணியம்பாடியில் உள்ள உழவர் சந்தை, வாரச்சந்தை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு இருந்தது.

தற்போது வாணியம்பாடி நகரின் மையப்பகுதியில் உள்ள வாரச்சந்தை மைதானத்தை மீண்டும் திறப்பது குறித்தும், அங்கு நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் நேற்று திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் சிவன்அருள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் வாரச்சந்தை பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் தினசரி காய்கறி கடைகளை ஆய்வு செய்தார். அப்போது அதே பகுதியில் கூடுதலாக 25 கடைகளை கட்டவும் கலெக்டர் உத்தரவிட்டார்.

ஆய்வின் போது வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் காயத்திரி சுப்பிரமணி, வாணியம்பாடி தாசில்தார் சிவப்பிரகாசம், துணை போலீஸ் சூப்பிரண்டு பழனிசெல்வம், நகராட்சி ஆணையாளர் சென்னு கிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர் அலி, கிராம நிர்வாக அலுவலர் சற்குணகுமார் மற்றும் வருவாய்த்துறையினர், நகராட்சி பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# திருப்பத்தூரில் அதிகாரி உள்பட 3 பேருக்கு தொற்று எதிரொலியாக வட்டார வளர்ச்சி அலுவலகம் மூடல்

திருப்பத்தூர்,

திருப்பத்தூரில் அதிகாரி உள்பட 3 பேருக்கு தொற்று எதிரொலியாக வட்டார வளர்ச்சி அலுவலகம் மூடப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இந்த நிலையில் திருப்பத்தூர் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலக மேலாளர் மற்றும் அலுவலக ஜீப் டிரைவர் ஆகியோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் வட்டார வளர்ச்சி அலுவலகம் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு மூடப்பட்டது

இதனிடையே நேற்று மாவட்டம் முழுவதும் மேலும் 68 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இவர்களில் ஜோலார்பேட்டை சந்தைக்கோடியூரில் 3 பேர், மூக்கனூரில் 2 பேர் மற்றும் எம்.எம்.எம்.ரெட்டி தெரு, வாலாட்டியூர், ஊசிநாட்டன் வட்டம், பாய்ச்சல், காவேரிப்பட்டு, தாமலேரிமுத்தூர், பெரியமோட்டூர் ஆகிய பகுதிகளில் தலா ஒருவர் என மொத்தம் 12 பேரும் அடங்குவர். இதனையடுத்து அவர்கள் சிகிச்சைக்காக திருப்பத்தூர் மற்றும் நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நேற்று 68 பேருக்கு தொற்று ஏற்பட்டதையடுத்து மாவட்டத்தில் பாதிப்பு எண்ணிக்கை 4 ஆயிரத்து 573 ஆக உயர்ந்துள்ளது. மேலும் நேற்று ஒரே நாளில் 57 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்




தேனி பெருந்திட்ட வளாகக் கூட்டரங்கில் மாவட்ட ஊராட்சிக் கூட்டம் தலைவர் பிரித்தாநடேஷன் தலைமையிலும் செயலாளர் பரமசிவன் முன்னிலையிலும் நடைபெற்றது இதில் துணை தலைவர் ராஜபாண்டியன் பெரியகுளம் வராக நதியை தூய்மைப்படுத்த துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் கொடியசைத்து துவக்கி வைத்தார் இதற்கான ஏற்பாட்டை செய்த நாடாளுமன்ற உறுப்பினா ஓ.பி.ரவீந்திரநாத் குமாருக்கு நன்றி தெரிவிக்க தலைவர் பிரித்தாநடேஷன் வழிமொழிந்தார் மேலும் ஜி.கே.பாண்டியன் கூறும்போது கூட்டத்தில் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொள்ள நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கவுன்சிலர்கள் இளம் வழுதி பாண்டியன், சந்திரசேகர், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஆழ்வார்குறிச்சியில் தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் சாலை மறியல்

அம்பை,

ஆழ்வார்குறிச்சியில் தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் சாலை மறியலில் ஈடுபட்டனர்

தென்காசி மாவட்டம் செப்:25 ஆழ்வார் குறிச்சியில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள விவசாயிகள் விரோத, வேளாண் மசோதாவை கண்டித்து, , தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பாக ஆழ்வார் குறிச்சி யில் பேருந்து நிலையம் அருகில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

மத்திய அரசுக்கு எதிராகவும், வேளாண் மசோதாவிற்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பப் பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர் மு.ராமகிருஷ்ணன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணைச் செயலாளர் ச. வேலாயுதம் அகியோர் தலைமை தாங்கினார்.



த.வி.ச கடையம் ஒன்றிய செயலாளர் இரா. முத்துராஜன். த.வி.ச ஒன்றிய தலைவர் ரி. சட்டநாதன். த.வி.ச வட்டாரத் தலைவர் ஷி. முருகன்.

வட்டார தலைவர் கி. பரமசிவன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஒன்றிய செயலாளர் றி.மாடசாமி. முன்னால் ஒன்றிய கவுன்சிலர் ஷி.கனகராஜ். வாலிபர் சங்க மாவட்ட தலைவர் ரி. மேனகா. மாதர் சங்க செயலாளர் நேசமணி. விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் சி.வெங்கடேஸ். ஒன்றியக்குழு உறுப்பினர் இரா. கிறிஸ்டோபர் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

வி.அப்பாத்துரை. சதாம்உசேன். வள்ளி. செந்தில்வேல். கனேசன். சீமான். முத்துவேல். ஹரிகரன். சங்கரன். செந்தில். சைலப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.சாலைமறியலில் ஈடுபட்ட 40திற்குமேற்பட்டோர் போலீசார் கைது செய்தனர்.

# நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதிமுகவில் இணைந்தனர்

உதகை

நீலகிரி மாவட்ட அதிமுக செயலாளரும் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கப்பச்சி வினோத் அவர்களின் தலைமையில் உதகை எப்பநாடு ஊராட்சிக்கு உட்பட்ட இடுஹட்டி கிராமத்தில் எம்ஜிஆர் இளைஞர் அணி சார்பில் எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ம மரகல் சிவக்குமார் ஏற்பாட்டில் உதகை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் டி பெள்ளி முன்நிலையில் நடைபெற்ற உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தில் இணைந்தனர்.

# ஆலங்காயம் பகுதியில் COVID-19 பணிகளை வட்டார மருத்துவ அலுவலர் ஆய்வு

திருப்பத்தூர்,



திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் பகுதிக்குட்பட்ட வார்டு எண்4ல் நமது வட்டார மருத்துவ அலுவலர் ச.பசுபதி. COVID-19 பணிகளை ஆய்வு செய்து பின்னர் ஆலங்காயம். வாணியம்பாடி சாலையில் முககவசம் அணியாத சென்ற வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதித்து முககவசம் வழங்கி அறிவுரை வழங்கினார்.உடன் மருத்து அலுவலர் வெங்கடேசன். சுகாதார ஆய்வாளர். ரமேஷ்,சுகாதார பணியாளர்கள், மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் இருந்தனர்.

# குன்னூரில் ஆலோசனைக் கூட்டம்

குன்னூர்




நீலகிரி மாவட்டம் குன்னூரில் இன்கோசார்வ் அலுவலகத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள், வடகிழக்கு பருவ மழை தொடர்பாக முதன்மை செயலாளர்/தலைமை செயல் அலுவலர் இன்கோசார்வ், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா இ. ஆ. ப., அவர்கள் முன்னிலையில் சுகாதாரத்துறை வருவாய்த்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# அம்மா நகரும் நியாய விலை கடையை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்

குன்னூர்



நீலகிரி மாவட்டம் குன்னூரில் அம்மா நகரும் நியாயவிலைக் கடையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா இ. ஆ. ப., அவர்கள் தொடங்கி வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் சாந்தி எ ராமு, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கப்பச்சி வினோத் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் நூதன போராட்டம்

திருச்சி,



வேளாண்க்கு எதிரான மத்திய அரசின் மசோதாவை கண்டித்து 25.09.2020 வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில் திருச்சிமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு மத்திய அரசு விவசாயிகளை அடிமைகளாக்கிவிட்டது என்பதை வலியுறுத்தி கழுத்தில் தூக்குக்கயிறு மாட்டியும், கைகளில் சங்கிலிகளை பூட்டியும், மனித மண்டை ஓடுகளுடன் நூதன போராட்டத்தை தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் றி. அய்யாக்கண்ணு தலைமையில் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். முடிவில் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து மனுவை அளித்தனர்.

செய்தி மற்றும் விளம்பரம் தொடர்புக்கு
அம்பாசமுத்திரம்,
ஜெயகணேஷ் : 7010664344
ஆலங்குளம்
முத்தையா : 9751220385



தென்காசியில் இடதுசாரிகள் மற்றும் விவசாயசங்கத்தினர் விவசாய சட்ட சோதாவை கண்டித்து பழைய பஸ் நிலையம் முன்பு சாலை மறியல் செய்தனர்

## ஜனசங்கத்தின் அகில பாரத பொதுச்செயலாளர் மறைந்த பண்டிட் தீனதயாள் உபாத்யாயாவின் 104வது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது




தென்காசி,

தென்காசி நகர பாரதிய ஜனதா கட்சி சார்பாகவும், கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி சார்பாகவும், தென்காசி தெற்கு ஒன்றியம் குற்றாலம் பாரதிய ஜனதா கட்சி கிளை கமிட்டி சார்பாகவும், ஜனசங்கத்தின் அகில பாரத பொதுச்செயலாளரும். சங்கத்தை இந்தியா முழுவதும் வளர்த்த பண்டிட் தீனதயாள் உபாத்யாயா அவர்களின் 104வது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.

தென்காசியில் ஜனசங்கத்தின் அகில பாரத பொதுச்செயலாளர் மறைந்த பண்டிட் தீனதயாள் உபாத்யாயா அவர்களின் 104வது பிறந்த தினம் நேற்று 25.9.2020. காலை 10.00 மணி அளவில் தென்காசி வாய்க்கால் பாலம் இசக்கிஅம்மன் கோவில் முன்பு பண்டிட் தீனதயாள் உபாத்யாயா அவர்களின் உருவப்படத்திற்க்கு மாலை அணிவித்து மலர் தூவி அணைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப் பட்டது. இந்நிகழ்சியில் மாவட்ட தலைவர் மு. ராமராஜா, மாவட்ட துணை தலைவர் முத்துகுமார், மாவட்ட செயலாளர் முத்துலெட்சுமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ராஜாசிங், மண்டல் பார்வையாளர் திருநாவுக்கரசு, தென்காசி நகர தலைவர் குத்தாலிங்கம், நகர பொதுச்செயலாளர்கள் நாராயண மூர்த்தி, ராஜ்குமார், நகர பொருளாளர் சேகர், நகர துணைத் தலைவர்கள் மந்திரமூர்த்தி, கருப்பசாமி, நகர செயலாளர் செல்வி, நகர இளைஞர் அணி தலைவர் ராமானுஜம், சங்கரசுப்ரமணியன், ராஜ்குமார், ரகுபதி, சிவா, முத்துச்சாமி, பாலு மற்றும் கட்சி நிர்வாகிகள். தொண்டர்கள். மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தென்காசி தெற்கு ஒன்றியம் குற்றாலம் கிளை கமிட்டி சார்பில் பண்டிட் தீனதயாள் உபாத்தியாயா அவர்களின் 104 வது பிறந்த நாளை முன்னிட்டு கட்சி கொடியேற்றி அன்னாருடைய படத்துக்கு மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன

நிகழ்ச்சிக்கு மு. திரு ராம ராஜா தலைமை தாங்கினார். தென்காசி மாவட்ட தலைவர் முன்னிலை வகித்தார். முருகன் தென்காசி ஒன்றிய தலைவர் வரவேற்புரை ஆற்றினார். முருகன் தென்காசி ஒன்றிய துணைத் தலைவர் மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் பி.செந்தூர்பாண்டியன் தென்காசி மாவட்ட ஊடகப் பிரிவின் தலைவர், திருநாவுக்கரசு தென்காசி ஒன்றிய பார்வையாளர் மகேஸ்வரன் மாவட்ட செயற்குழு உறுப்பினர், ஜெய்சங்கர் தென்காசி மாவட்ட ஓபிசி அணி பொதுச் செயலாளர், நாகராஜன் தென்காசி ஒன்றிய விவசாய அணி தலைவர், சோடா மாரியப்பன் மாடசாமி (எ) செல்லத்துரை முன்னாள் ஒன்றிய பொதுச் செயலாளர், சுடலை முன்னாள் தென்காசி ஒன்றிய செயலாளர், வள்ளிநாயகம் செல்வராஜ், சுப்புராஜ், பரமசிவன், மாரியப்பன், வேலம்மாள், கோட்டை தாய் மாரிமுத்து, குற்றாலிங்கம், மாரியம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்

கீழப்பாவூரில் நேற்று 25.9.2020. காலை 9 மணி அளவில் பாவூர்சத்திரம் காமராஜர் சிலை மேல்புறம் விநாயகர் கோவில் முன்பு திரு உருவப்படத்திற்க்கு மாலை அணிவித்து மலர் தூவி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தலைமை மாரியப்பன் ஒன்றியதலைவர, சிறப்பு விருந்தினராக

மாவட்ட தலைவர் ராமராஜா அவர்கள் கலந்து கொண்டு பண்டிட் தீனதயாள் உபாத்யாயா அவர்கள் திருவுருவ படத்திற்கு மலர்அஞ்சலி செலுத்தினார் மற்றும் நிகழ்ச்சியில் மத்திய அரசு வழக்கறிஞர் சாக்ரடீஸ், மாவட்ட பொருளாதார பிரிவுதலைவர் முத்துராஜ், மாவட்ட விவசாய அணி பொது செயலாளர் விஜயசேகர், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆறுமுகம் (எ) முருகேசன், மாவட்ட அரசு பிரிவு செயலாளர் சுப்பிரமணியன்,மாவட்ட மிஜி பிரிவு செயலாளர் சாமிநாதன்,மண்டல் பார்வையாளர் சுடலையாண்டி, ஒன்றிய பொதுசெயலாளர் பாலசுப்பிரமணியன், ஒன்றிய துணைதலைவர்கள் பேச்சு முத்து, குமரேசன்,ஒன்றிய பொருளாளர் பாஸ்கர், ஒன்றிய விவசாய அணி துணைதலைவர் முப்புடாதி, ஒன்றிய விவசாய அணி பொருளாளர் பேச்சு முத்து, சுரேந்திரன், தங்கச்சாமி, சக்தி கேந்திர பொறுப்பாளர்கள் செல்வராஜ், செல்வன், சேர்மன், சின்னதம்பி, மகராஜன், சேர்மக்கனி மற்றும் தங்கராஜா,ராஜா, ஆர்.எஸ்.எஸ். நிர்வாகிகள் திரு.சண்முகசுந்தரம், பிச்சையா, கட்சி நிர்வாகிகள். தொண்டர்கள். மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப்பட்டது



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.கழகத்தின்நெசவாளர்அணிச்செயலாளராககே.என். ஏல்.சுப்பையா மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதனுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து பெற்றார் அருகில் மாணவரணி செயலாளர் ராஜா இளைஞரணி செயலாளர் ஆறுமுகசாமி வக்கீல் செங்கோட்டை வெங்கடேசன் மற்றும் நகரச்செயலாளர் சாதிர் கழக நிர்வாகிகள் உள்ளனர்



தென்காசியில் சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அவரது படத்திற்கு சமத்துவ மக்கள் கழகத்தின் மாவட்ட செயலாளர் லூர்து நாடார் மாலை மரியாதை செலுத்தினார். அருகில் கட்சி நிர்வாகி உள்ளனர்.

## புதிய தென்காசி ஆட்சியர் அலுவலகம் ஆயிரப்பேரியில் அமைக்கக்கோரி தென்காசியில் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்

தென்காசி,



திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாக பிரித்து தென்காசியை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்டம் கடந்த ஆண்டு உருவானது. இந்த மாவட்டத்தின் புதிய ஆட்சியர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு தமிழக அரசு ரூ.119 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த கட்டிடத்தை தென்காசி அருகே உள்ள ஆயிரப்பேரியில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் ஆட்சியர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்ட இடம் நீர்ப்பிடிப்பு பகுதி என்றும், பொதுமக்கள் எளிதில் வர முடியாது என்றும் கூறி தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதுதொடர்பாக மதுரை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று காலை ஆயிரப்பேரி கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் அங்குள்ள அனைத்து கட்சி நிர்வாகிகள், தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் புதிய கட்டிடம் ஆயிரப்பேரியில் அமைக்கவேண்டும் என்றும், இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க கூறும் காரணங்கள் பொய்யானவை என்றும் தெரிவித்தனர். பின்னர் இதுகுறித்து ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனுவை கொடுத்து சென்றனர்.

## எஸ்.பி.பி. மறைவுக்கு மாநில முதல்வர்கள் இரங்கல்

சென்னை,

எஸ்.பி. பாலசுப்ரமணியம் மறைவுக்கு மம்தா பானர்ஜி, உத்தவ் தாக்கரே உள்ளிட்ட பல்வேறு மாநில முதல்வர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் உடல்நலம் தேறி வந்த நிலையில், நேற்று அவரது உடல்நிலையில் திடீரென பின்னடைவு ஏற்பட்டது. இன்று மதியம் காலமானார். அவரது மறைவுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் உள்ளிட்ட தமிழக அரசியல் தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கேரள மாநில முதல்வர் பிணராயி விஜய், கர்நாடக முதல்வர் எடியூரப்பா, ஆந்திர மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி, மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி, ஒடிசா முதல்வர் பட்நாயக், மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே, ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், மத்திய பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் உள்ளிட்ட பெரும்பாலான மாநில முதல்வர்கள் தங்களது இரங்கலை தெரிவித்துள்ளனர்.

## ரூ.10 லட்சத்தில் நடைபாதை அமைக்கும் பணி சாந்தி ராமு எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

கோத்தகிரி,

கோத்தகிரி அருகே ரூ.10 லட்சத்தில் நடைபாதை அமைக்கும் பணியை சாந்தி ராமு எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

கோத்தகிரி பேரூராட்சிக்கு உட்பட்ட கன்னிகா தேவி காலனியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்திற்கு செல்லும் நடைபாதை கடந்த சில மாதங்களாக பழுதடைந்து குண்டும் குழியுமாக காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த சாலையை புதுப்பித்து தர வேண்டும் என அப்பகுதி கிராம மக்கள் பேரூராட்சி நிர்வாகத்தை வலியுறுத்தி வந்தனர். இந்த கோரிக்கையை ஏற்று தமிழக சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தடுப்புச்சுவருடன் கூடிய நடைபாதை அமைக்க ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த பணிகளுக்கான பூமிபூஜை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சாந்தி ராமு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

இதில் கோத்தகிரி பேரூராட்சி செயல் அலுவலர் மணிகண்டன், மேற்பார்வையாளர் சுரேஷ், கிழக்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## மின் கட்டணம் செலுத்த வரிசையில் நின்றவரிடம் பணம் அபேஸ் வாலிபர் கைது

கன்னங்குறிச்சி,

சேலம் கன்னங்குறிச்சியில் மின் கட்டணம் செலுத்த வரிசையில் நின்றவரிடம் பணம் அபேஸ் செய்த வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

சேலம் கன்னங்குறிச்சி பகுதியை சேர்ந்தவர் கோவிந்தராஜ் (வயது 38). இவர் நேற்று முன்தினம் மின்கட்டணம் செலுத்துவதற்காக அதே பகுதியில் உள்ள மின்சார அலுவலகத்துக்கு சென்றார். பின்னர் அவர் அங்கு வரிசையில் நின்று கொண்டிருந்தார். அப்போது அவர் அருகே நின்று கொண்டிருந்த 27 வயதுடைய வாலிபர் ஒருவர், கோவிந்தராஜ் சட்டைப்பையில் இருந்த ரூ.1,000த்தை அபேஸ் செய்து விட்டு தப்பி சென்று விட்டார்.

இதுகுறித்து கன்னக்குறிச்சி போலீஸ் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த நிலையில் கோவிந்தராஜிடம் பணம் அபேஸ் செய்தது தொடர்பாக கன்னங்குறிச்சியை சேர்ந்த விஜய் (27) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

## திருவண்ணாமலை இளம் பெண் பாலியல் பலாத்காரம்

திருவண்ணாமலை,

திருவண்ணாமலை இளம் பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்,

திருவண்ணாலை அருகே உள்ள ஆவூர் கிராமத்தை சேர்ந்தவர் பார்த்தீபன் (வயது 29). இவரும், அதே பகுதியை சேர்ந்த 16 வயது இளம் பெண்ணும் காதலித்து வந்து உள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு இளம்பெண் வீட்டில் தனியாக இருந்த போது பார்த்தீபன் வீட்டிற்குள் நுழைந்து அவளை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், அதை வெளியே சொன்னால் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படுகிறது.இதையடுத்து இளம் பெண் கர்ப்பமானார். இதுகுறித்து இளம் பெண் கொடுத்த புகாரின் பேரில் திருவண்ணாமலை அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


## தவறிவிட்டது

தென்காசி மாவட்டம் இலத்தூர் கிராமம், சீவநல்லூர் வடக்கு தெருவைச் (கதவு எண்1/3/33 ) சேர்ந்த சு.சந்தனசெல்வி த/பெ. சுப்பிரமணியன் அவர்களின் பள்ளிக்கூட சான்றிதழ்கள் (+2 மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ்) தென்காசியில் இருந்து திருநெல்வேலி செல்லும் வழியில் தவறிவிட்டது

கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும் தக்க சன்மானம் வழங்கப்படும்

**செல்: 7373508301, 8668008381**




தென்காசி மாவட்ட பாவூர்சத்திரம் பஸ்நிலையத்தில் தி.மு.கழகத்தின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாகமை நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க பொறுப்பாளர் சிவபத்மநாதன் துவக்கி வைத்தார் அருகில் தொழில் அதிபர் ஆர்.கே காளிதாசன். கீழப்பாவூர் ஒன்றியச்செயலாளர் சீனிதுரை மற்றும் பலர் உள்ளனர்




தென்காசியில் எஸ்பிடிஐ சார்பில் விவசாய சட்ட மசோதாவை கண்டித்து சட்ட மசோதா நகலை கிழித்து எரிந்து புதிய பஸ் நிலையம் முன்பு பேராட்டம் நடத்தினர்.




பாவூர்சத்திரம் குரும்பலாபேரியில் சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திமுக வர்த்தக அணி மாநில துணைத் தலைவர் அய்யாதுரை பாண்டியன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## வள்ளியூர் ஒன்றியத்தில் திமுகவின் ஆன்லைன் உறுப்பினர் சேர்க்கை முகாம்

### ஞானதிரவியம் எம்.பி. தொடங்கி வைத்தார்

வள்ளியூர்:

வள்ளியூர் ஒன்றியம் ஆவரைகுளத்தில் எல்லோரும் நம்முடன் திமுக ஆன்லைன் சேர்க்கை முகாம் நடைபெற்றது.

திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர், நெல்லை கிழக்கு மாவட்ட பொருளாளர், வள்ளியூர் ஒன்றிய செயலாளர் அண்ணாச்சி சா.ஞானதிரவியம் எம்பிஅவர்கள் தலைமையில்,நெல்லை கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் ராதாபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் முன்னிலையில், நடைபெற்றது.




இதில் வள்ளியூர் ஒன்றியத்திற்குட்பட்ட 18 ஊராட்சி மற்றும் வள்ளியூர் ,பணகுடி பேரூர் பகுதிகளில் சுமார் 25000 உறுப்பினர்களை சேர்ப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜோசப் பெல்சி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மல்லிகா அருள்,

வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம், பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன், ஒன்றிய அவைத்தலைவர் சிவராமகிருஷ்ணன் மாவட்ட மீணவரணி அமைப்பாளர் எரிக் ஜுட் மாவட்ட பிரதிநிதிகள் ராமசாமி, ராஜகோபால் மு.க.மாணிக்கம், அசோக்குமார், அய்யாகுட்டி கிழவநேரி ஏ.திலகர் உள்ளிட்ட ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் அதிமுக அமமுக நாம்தமிழர் ஆகிய மாற்றுகட்சியினர் சுமார் 200பேர்கள்திமுகவில் தங்களை உறுப்பினர்களாக இணைத்து கொண்டனர்.



தென்காசி, செங்கோட்டை, புளியங்குடி ரோட்டரி சங்கங்கள் இணைந்து கோவிட்-19 பேரிடர் காலநிதி 5 லட்சத்து 10 ஆயிரம் ரூபாபை மாவட்ட ஆட்சியர் அருண் சுந்தர் தயாளனிடம் வழங்கினார். அருகில் மாடசாமி ஜோதிடர், ஜாண்சன், பெருமாள், செல்வ கணபதி, ஸ்டாலின் ஜவகர், நாதன் மற்றும் பால்ராஜ் ஆகியோர் உள்ளனர்.






தென்காசி மாவட்டம், குருவிகுளம் மற்றும் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட, 24 கிராம பஞ்சாயத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் (ஜல்ஜீவன் மிஷன்) முலம் சுகாதாரமான மற்றும் முறையான குடிநீர் வழங்கும் திட்டப்பணிகளுக்கு ரூ.10.25 கோடி மதிப்பில் ஆதிதிராவிடர் மற்றுமு பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ராஜலெட்சுமி குடிநீர் பணிகளுக்கு பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

# கடையநல்லூர் அருகே மலைவாழ் மக்களுக்கு பசுமை வீடு கட்டும் பணிகள் தொடக்கம்

## அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய தென்காசி மாவட்ட ஆட்சியர் உத்தரவு

கடையநல்லூர்,செப்.26-

கடையநல்லூர் அருகே கருப்பாநதி அணை பகுதியில் மலைவாழ் மக்கள் குடியிருக்கும் கலைமான் நகரில் அரசு சார்பில் கட்டப்பட்ட குடியிருப்புகள் சேதமடைந்தது. இதையடுத்து மாற்று வீடுகள் கட்டித்தரக்கோரி, தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் மலைவாழ் மக்கள் கோரிக்கை வைத்தனர். மலைவாழ் மக்கள் கோரிக்கையை ஏற்று கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் சேதமடைந்த அனைத்து குடியிருப்புகளையும் அகற்றி விட்டு பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அருண் சுந்தர் தயாளன் உத்தரவிட்டார். அதற்கான பணிகள் நேற்று தொடங்கியது. குடியிருப்பு பகுதிக்கு மாவட்ட ஆட்சியர் அருண் சுந்தர் தயாளன் நேரில் சென்று பார்வையிட்டார்.



இதனை தொடர்ந்து, புளியங்குடி நகராட்சி கோட்டை பகுதியில் வசித்து வரும் பழங்குடி மக்கள் வசித்து காட்டுப்பகுதியில் ஆடு மேய்ப்பது, மலைத்தேன் சேகரிப்பது போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு தமிழக அரசு சார்பில் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் 40ஆண்டுகள் மேலான நிலையில் சிதலமடைந்து இருப்பதால் அதனை சீரமைத்து தரக்கோரியும், குடிநீர் உள்ளிட்ட அடிப்படைவசதிகளை செய்து தரக்கோரியும் அப்பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர்.

இதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அருண் சுந்தர் தயாளன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு அப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டு பழங்குடி மக்களின் குறைகளை கேட்டறிந்தார். அதன் அடிப்படையில் அங்கு வாழும் மக்களின் குடியிருப்புகளை சீரமைக்கவும் , மின்விளக்கு வசதிகள் செய்து கொடுக்கவும் மற்றும் தேவையான அடிப்படைவசதிகள் செய்து கொடுக்கவும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். பழங்குடியின மக்களுக்கு தேவையான அடிப்படைவசதிகள் செய்து கொடுக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தென்காசி ஆட்சியர் உத்தரவிட்டதை தொடர்ந்து அப்பகுதி பழங்குடியின மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியர் அருண் சுந்தர் தயாளன் அவர்களுடன் தென்காசி உதவி கலெக்டர் பழனிகுமார், கடையநல்லூர் தாசில்தார் பாலசுப்பிரமணி, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) சக்திஅனுபமா, வருவாய் ஆய்வாளர் முருகன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




